சாத்தியாறு அணைக்கட்டைச் சுற்றுலா நிலையமாக்கல்

* 434 வினா—திரு. பி. எஸ். மணியன்: மாண்புமிகு பின்தங்கிய வகுப்பினர் நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மதுரை மாவட்டம், சாத்தியாறு அணைக்கட்டைச் சுற்றுலா நிலையமாக மாற்றும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: இல்லை.

திரு. பி. எஸ். மணியன்: தலைவர் அவர்களே, மதுரை நகரத்தின் அருகாமையில், பதினைந்து மைல் தூரத்தில், முற்றிலும் இனிமையான சூழ்நிலையிலிருக்கும் இடம் சாத்தியாறு அணைக்கட்டு. இது அழகர் கோவிலிலிருந்து ஆறு மைல் தூரத்தில் உள்ளது. நம்முடைய அமைச்சரவையிலிருக்கும் மாண்புமிகு அமைச்சர்களில் நான்கு அமைச்சர்கள் அந்த இடத்திற்கு வந்திருந்து அந்த இடத்தின் சூழ்நிலையைப் பாராட்டியிருக்கிறார்கள். ஆகவே அந்த இடத்தைச் சுற்றுலா நிலையமாக மாற்ற அரசு ஆராய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம்: பேரவைத் தலைவர் அவர்களே, சாத்தியாறு அணைக்கட்டு நல்ல சூழ்நிலையில், ரம்யமான இடத்திலிருக்கிறதென்பது உண்மை. அதைச் சுற்றுலா நிலையமாக்குவதற்கு நம்முடைய தலைமைப் பொறியாளரிடம் திட்டம் தீட்டும்படி கேட்டுக் கொண்ட நேரத்தில் இரண்டு லட்சத்தி நாற்பதாயிரம் ரூபாய் தேவைப்படுமென்று சொன்னார்கள். இந்த ஆண்டு நிதி நிலை இடம் தராததால் எடுத்துக் கொள்ளப்படவில்லை. 1972–73-ல், இரண்டாவது பாகத் திட்டமாக எடுத்துக் கொள்ள அரசு உத்தேசித்திருக்கிறதென்று தெரிவித்துக்கொள்கிறேன்.

Rest house at Chittanna Vasal

* 435 Q.—Dr. H. V. HANDE: Will the Hon. the Minister for Backward Classes be pleased to state:

(a) whether the Government has any proposal to construct a rest house at Chittanna Vasal for the benefit of the tourists; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு திரு. இராசாராம்: இல்லை.

Half ticket system for children in State Transport Buses

* 436 Q. Dr. H. V. HANDE: Will the Hon. the Minister for Transport be pleased to state:

(a) whether the Government has any propsal to introduce half ticket system to children in State Transport buses; and

(b) if so, the details thereof?